Registered as a newspaper

Bitsmans Institutes
Manipay.
A L 87
AUGUST
கணித, விஞ்ஞான
மீட்டல் வகுப்புக்கள்
பௌதீகம் - சௌந்தி
தூய, பிரயோக கணிதம் - கமலசிங்கம்
தாவரவியல் - குகதாசன்
இரசாயனம் - மக்ஸி
விலங்கியல் - ஈசன்
ஆரம்பம்: 1-1-87
வியாழன் 3-15 p. m.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

Bitsmans Institutes
Manipay.
A/L 87
AUGUST
கலை, வர்த்தக
மீட்டல் வகுப்புக்கள்
பொருளியல் - சின்னத்தம்பி
வர்த்தகம் : தேவா
கணக்கியல் : ராஜன்
அளவையியல்: SS மனோகரன்
தமிழ்,
இந்து நாகரீகம் : பரணா
அரசியல் - ஜெயராஜா
ஆரம்பம்: 1-1-1987
வியாழன் 2-00 p. m.

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மார்கழி மீ 08 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 20 (23-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 23

ராஜீவ் பணிப்பின் பேரில்

# சிதம்பரம் குழுவினர் இன்று எம். ஜி. ஆருடன் பேச்சு

## தமிழர் குழுக்களுடன் வார இறுதியில் சந்திப்பு

புதுடில்லி, டிச. 23

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாகக் கலந்தாலோசிப்பதற்காக சிதம்பரம் குழு இன்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்திக்க உள்ளது.

பிரதமர் ராஜீவ் காந்தியின் பணிப்பின் பேரிலேயே இச் சந்திப்பு நடக்க உள்ளது.

வார இறுதியில் சிதம்பரம் குழு தமிழர் அமைப்புக்களையும் சந்திக்கும்.

இணை அமைச்சர்கள் ப. சிதம்பரமும், நட்வர் சிங்கும் நேற்றுக் காலை பிரதமர் ராஜீவ் காந்தியிடம் இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்களைத்தெரிவித்தனர்.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றையும் அவர்கள்கையளித்தனர்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசு எடுத்துள்ள பிந்தியநிலைப்பாடு, கருத்துக்கள்பற்றி பிரதமர் காந்தியுடன் இணை அமைச்சர்கள் ஆராய்ந்தனர்.

இன்று (செவ்வாய்) புதுடில்லியில் தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜீ. இராமச்சந்திரனை இணை அமைச்சர் குழு சந்திக்கும் என்று புதுடில்லி அரசு அறிவித்திருக்கின்றது.

வார இறுதியில் இணை அமைச்சர்கள் சென்னை சென்று தமிழர் அமைப்புக்களைச் சந்திப்பர்.

கொழும்புப் பேச்சுக்களின் பெறுபேறுகளை இணை அமைச்சர்கள் தமிழர் அமைப்புக்களுக்குத் தெரிவித்து அவர்களின் கருத்துக்களையும் பெறுவர்.

-இப்படி புதுடில்லிவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-எ)




சிங்கள அரசியல்வாதிகளும் பௌத்த குருமாரும் யாழ்ப்பாணம்வந்து புலியோடை பேச விரும்புகினம். ஆனால் இராமண்ணமார்முகாம்களுக்கு வெளியாலை வந்து புலியோடை சுரண்ட விரும்புகினம். இப்பிடி ஒரு வித்தியாசம் பார்த்தியளே...;

கொலைகாரர்களைக் தண்டிக்க போராளிகள் உறுதி

# இரு முஸ்லிம்களின் சடலங்கள் புதைகுழியிலிருந்து மீட்பு

## கிழக்கில் சம்பவம்

மட்டக்களப்பு, டிச.23

கடந்த சனிக்கிழமை பிற்பகல் தாளங்குடாவில் வைத்து கடத்தப்பட்ட இரண்டு முஸ்லிம் வர்த்தகர்களின் சடலங்களும் ஞாயிறு மாலை புதைகுழிகளில் இருந்து மீட்டு எடுக்கப்பட்டன.

கல்முனையில் இருந்து காத்தான்குடி நோக்கி மினிபஸ்ஸில் வந்து கொண்டிருந்த சமயம் தனிப்பட்ட கோஷ்டி ஒன்றினால் இந்த இரண்டு வர்த்தகர்களும் கடத்தப்பட்டனர்.

சனக்கிழமை காலை இரண்டு தமிழ்த்தொழிலாளர்கள் ஊர்காவல் படையினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தின் பின்னர் தான் இந்த இரண்டு வர்த்தகர்களும் தனிப்பட்ட குழு ஒன்றினால் கடத்தப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

கடத்தப்பட்டுக்கொலை செய்யப்பட்ட இரண்டு வர்த்தகர்களின் பெயர்கள் வருமாறு:

1. கலிலுர் ரஹ்மான் வயது 29, யாழ் ஏ. கே. டெக்ஸ்டயில் உரிமையாளர்.

முகமதுசுக்ரி,வயது17, மட்டக்களப்பு — யாழ் டெக்ஸ்டயில்ஸ் உரிமையாளர்.

முஸ்லிம்கள்,போராளிகளிடம் கடத்தப்பட்டவர்களைக்கண்டுபிடித்துத் தருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அதைத் தொடர்ந்து போராளிகள் தீவிரத் தேடுதல் நடத்தி ஞாயிறு புதைகுழி ஒன்றைத் தோண்டி இருவரினதும் சடலங்களை மீட்டனர்.

இரவு எட்டு மணியளவில் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

உறவினர்கள் சடலங்களை நேற்று (திங்கள்) அதிகாலை ஒரு மணியளவில் அடக்கஞ் செய்தனர்.

இக் கடத்தலுக்கும் கொலைக்கும் பொறுப்பானவர்களைக் கண்டு பிடித்துத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று போராளிகள் முஸ்லிம்களிடம்உறுதிகொடுத்தனர்.

மரணமான முஸ்லிம் வர்த்தகர்களின் சடலங்கள்மீது மரண விசாரணையோ, பிரேத பரிசோதனையோ நடத்தப்படவில்லை. (உ-எ-21)

GLORIA
TRAVELS

● கனடா ● நோர்வே
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்
நோர்வே, கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.
* நோர்வே செல்லும் அரிய வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்.
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND)
விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.
GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

# கடும் மோதல் கொம்மாதுறையில்

மட்டக்களப்பு டிச. 23

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் கொம்மாதுறை என்னும் இடத்தில் நேற்றுமாலை போராளிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையே பெரும் மோதல் ஏற்பட்டதாக மட்டக்களப்புக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன

இதனால் மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனை நோக்கிச் சென்ற வாகனங்கள் அனைத்தும் செங்கலடியிலும்—

வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த வாகனங்கள் அனைத்தும் வந்தாறுமூலையிலும் வைத்து திருப்பியனுப்பப்பட்டன (உ-எ-21)

# வெளியேறிய படைமீது புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிச. 23

நேற்றுப் பகல் 11 மணியளவில் கோட்டை இராணுவ முகாமில் இருந்து மூன்று கவச வாகனங்கள் சகிதம் வெளியேறி நகரை நோக்கி முன்னேறிய இராணுவச் சிப்பாய்களை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதனால் படையினர் பின்வாங்கினர்.

மண்டைதீவுக்கு புறப்பட்ட சிப்பாய்கள் திடீரென கோழிக் கடைப் பக்கமாக கவச வாகனங்களைத் திருப்பி குடாநாட்டுக்குள் நுழைய முயன்றபோது புலிகள் தாக்குதல் நடத்தினர்.

புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல் காரணமாக இராணுவ வாகனங்களும், சிப்பாய்களும் பின்வாங்கி மண்டைதீவு நோக்கித் திரும்பிச் சென்றனர். (உ-10)

# காத்தான்குடியில் நேற்று ஹர்த்தால்

## முஸ்லிம் இளைஞர் முன்மாதிரி

மட்டக்களப்பு, டிச. 23

முஸ்லிம் வர்த்தகர்கள் கொலைச் சம்பவம் தொடர்பாகநேற்றுகாத்தான்குடியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் மூடப்பட்டன வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை.

இதனிடையில் முஸ்லிம் இளைஞர்கள் கூட்டமாகச் சென்று தமிழ்க் கிராமங்களான மஞ்சத்தொடுவாய், ஆரையம்பதி பகுதிகளில் இருந்து தமிழர்களை காத்தான்குடிக்கு வராது தடுத்தனர்.

எதற்காகஇப்படி தடுக்கிறீர்கள் என்று கேட்டபோது -

"சில தீயசக்திகள் தமிழர்களைத் துன்புறுத்தி மீண்டும் கலவரத்தைத் தொடக்கத் தூபம் போடக்கூடும். அதனால் முன் எச்சரிக்கையாக தமிழரை காத்தான்குடி வராமல் தடுத்தோம்" என்று தெரிவித்தனர். (உ-எ-21)

# ஈ. பி. ஆர். எல். எவ். - ரெலோ இணைந்து தாக்க இருந்தன

## அதனால் தான் நடவடிக்கை என்கிறார் கிட்டு

அச்சுவேலி டிச 23

ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கமும் ரெலோ இயக்கமும் சேர்ந்து எம்மைத்தாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தன. அதனால் தான் நடவடிக்கை எடுத்தோம்.

புலிகளின் வட பிராந்தியத்தளபதி கிட்டு இவ்வாறு கூறினார்.

அச்சுவேலி மகாவித்தியாலயத்துக்கு முன்பாக மேஜர் அல்பேர்ட் (ரூபத நிதி) நினைவுத்தூபிதிறப்பு விழா திரு. க. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நினைவுத்தூபியை மேஜர் அல்பேர்ட்டின் தாயார் திருமதிசரஸ்வதி கந்தையா திறந்து வைத்தார்.

திறப்புவிழாவை அடுத்து நடைபெற்ற கூட்டத்தில் கிட்டு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் தனிப்பட்ட முறையில் போராடி தாங்களே ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்றநோக்குடன் ஏனைய அமைப்புக்களைத் தடை செய்கின்றனர் என சிலர் பொய்ப் பிரசாரம் செய்கின்றனர் இது தவறு.



கிட்டு

எமது இயக்கத்தில் தலைவர்கள களத்திற்குச் சென்றுதான் தாக்குதலை வழி நடத்துகின்றார்கள்.

இதுவரையில் 384 புலிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மரணமடைந்துள்ளனர் நானும் எப்பொழுது சாவேன் என்பது தெரியாது இந்த நிலையில் எதிர்கால சுகபோகங்களைக் கருத்தில் வைத்து நாம் செயற்படுவதாகக் கூறுவது தவறு.

அண்மையில் ஈ.பி.ஆர் எல். எப் இயக்கத்தை யும் முற்றாகத் தடை செய்தோம் மன்னாரில் கைது செய்யப்பட்டவர்களில்ரெலோவைச்சேர்ந்த பலர் உள்ளனர் ரெலோவும் ஈ. பி.ஆர். எல். எவ் இயக்கமும் சேர்ந்து எம்மைத்தாக்குவதற்குத் தீர்மானம் எடுத்து செயற்பட்டன. அவர்கள் தீர்மானித்திருந்த தினத்திற்கு முன் தினமே நாங்கள் நடவடிக்கை எடுத்தோம் என்று கூறினார் (இ-11)

# ★ ஆளும் கட்சி எம். பி யாழ் வந்து புலிகளைச் சந்திப்பார்?

யாழ்ப்பாணம், டிச. 23

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எட்டியாந்தோட்டை எம். பி. திரு. வின்சென்ட் பெரேரா நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு வடக்கே வர பெரு விருப்பம் கொண்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தமது விருப்பத்தை அவர் வெளியிட்டார்.

நேற்றுத் தொலைபேசி மூலம் அவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டார்.

உங்களால் பிடிக்கப்பட்ட இரண்டு சிப்பாய்களையும் நீங்கள் விடுவிப்பீர்கள் என நாம் எதிர்பார்த்திருக்கவில்லை.

உங்கள் மனிதாபிமானத்தை மெச்சுகிறோம்.

சிங்கள, தமிழ் மக்களுக்கிடையிலான நல்லுறவை மேலும் வளர்ப்பதற்கு வழி செய்யும் விதத்தில் சிங்கள மக்கள் குழு ஒன்றுடன் — உங்களைச் சந்திப்பதற்காக — விரைவில் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு வடக்கிற்கு வருவேன்.

— இப்படி எட்டியாந்தோட்டை எம். பி புலிகளிடம் கூறினார் என்று அறியப்படுகிறது.

கைதிகள் பரிமாற்றத்திற்காக அமைச்சர் அத்துலத்முதலி யாழ்ப்பாணம் வந்தபோது அவருடன் கூட வந்தவர் திரு. வின்சென்ட் பெரேரா. கைதிகள் பரிமாற்றம் குறித்து அரசு, போராளிகள் நடத்திய பேச்சுக்களுக்குப் பின்னின்று உதவிய திரு. ஜெயபாலசிங்கம், இவரது நெருங்கிய நண்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

# தொண்டமானாறில் புலிகள் 'கனன்சார்ஜ்'

யாழ்ப்பாணம், டிச. 23

நேற்று மாலை 4 மணியளவில் தொண்டமானாறு நோக்கி 4 வாகனங்கள் சகிதம் நடந்து சென்று கொண்டிருந்த சுமார் 100 இராணுவத்தினர் மீது நீர்பபட்டி என்னும் இடத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் கனன் சார்ஜ் தாக்குதல் நடத்தினர்.

25 யார் தூரத்தில் இருந்து இத் தாக்குதல் நடத்தப்பட்டதால் இராணுவத்தினருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

தாக்குதல் நடந்த இடத்தில் இராணுவத்தினரின் ஹெல்மெட்டுக்கள் உடைந்து சிதறிய துண்டுகள் காணப்பட்டன. நிலத்தில்இரத்தக் கறைகள் காணப்பட்டன. பொதுமக்கள் திரண்டு சென்று இவற்றைப் பார்த்தனர்.

பின்னர் ஹெலிக்கொப்டர் வந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.(இ-எ)

# பண்ணை ஆஸ்பத்திரி மீது ஷெல் குண்டு!

யாழ்ப்பாணம் டிச.23

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து நேற்றுப்பகல் ஏவப்பட்ட ஷெல் குண்டு ஒன்று பண்ணை ஆஸ்பத்திரிக்குள் விழுந்து வெடித்தது.

இதனால் ஆஸ்பத்திரியின் சிலபகுதிகள் பலத்த சேதம் அடைந்துள்ளன,

இத்தாக்குதலை அடுத்து தமிழீழ இராணுவமும் நேற்று கோட்டையை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தியது.

இதனால் ஏற்பட்ட சேத விவரம் பற்றி தெரியவில்லை. (உ-10)

கோட்டையிலிருந்து துப்பாக்கிச் சூடு!

# யாழ் ஆஸ்பத்திரி ஊழியர் தப்பினர்

யாழ்ப்பாணம், டிச. 23

யாழ் கோட்டை முகாமுக்கு அருகில் உள்ள கழிவு நீர்அகற்றும் இயந்திரத்தை இயக்கச் சென்றயாழ்-ஆஸ்பத்திரி ஊழியர்கள் மீது நேற்று சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

எனினும் தெய்வாதீனமாக காயம் எதுவும் இன்றிஊழியர்கள் தப்பிக் கொண்டனர்.

யாழ் வைத்தியசாலை உயரதிகாரிகள் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சம்மதத்தைப் பெற்றதன் பின்னரே ஊழியர்கள் அங்கு கடமைக்குச் சென்றனர் (இ-10)

# இந்தியா சாதனை!

கான்பூர், டிச. 23

டெஸ்ட் சரிதத்தில் இந்தியா தனது ஆகக்கூடிய ஓட்டங்களை இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் பெற்றுக் கொண்டது.

கான்பூர் டெஸ்ட் நேற்று வெற்றிதோல்வியின்றி முடிவுற்ற போது இந்திய அணி 7 விக்கெட் இழப்புக்கு 676 ஓட்டங்களைப் பெற்று இந்த சரித்திரத்தை நிலைநாட்டியது. கவாஸ்கர் 176, அஸாருதின் 199, கபில்தேவ்163 ஓட்டங்களைப்பெற்றனர்.

## சுபநேரம்

23—12—1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10·55முதல்– 12·25வரை
ராகுகாலம்:
3·25முதல்– 4·55வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்.

பிரயாண ஒழுங்குகள்
(சிங்கப்பூர்)

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாஸ்போட் உரிமையாளர்களுக்கான விசா கிடைக்கப் பெற்றுள்ளதால் உடனடியாகப் பயணம் மேற்கொள்வதற்காக இன்று எமது அலுவலகத்தில் வந்து சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

| | | |
|---|---|---|
| N. செல்வநாயகம் | G | 0076133 |
| T. திலகநாதன் | G | 0282850 |
| A. E. யுஸ்லேவி | H | 0471685 |
| M. G. தர்மராஜா | F | 093496 |
| K. S. பாலச்சந்திரன் | H | 0451482 |
| S. A. அரசமோகன் | G | 0342199 |
| P. M. சிவசுப்பிரமணியம் | J | 0072841 |
| V. P. பாலச்சந்திரன் | J | 0030455 |
| A. ரொபின்சன் சந்திரகுமார் | J | 0114691 |
| A. T. பழனியாண்டி | H | 0405662 |

TRI STAR TRAVELS
ரை ஸ்ரார் றவல்ஸ்
இல: 6, நவீனசந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்: 23831

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பலாலி விமான நிலையத் தளம் விரிவாக்க ஏற்படுத்தப்பட்டுள்ள பகுதி காணிகளுள் குத்தகைக்குப் பயிர்செய்து நட்டமடைந்தோருக்கு நிவாரணம்

# அறிவித்தல்

பலாலி விமானநிலையத்தின் விரிவாக்க ஏற்பாடுகள் 1964 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட் ப்படி திருத்தப்பட்ட வாறுள காணி எடுத்தல் சட்டம் 2 ம் பிரிவின் 1ஆம் உட்பிரிவின்கீழ் காணி காணி அபிவிருத்தி அமைச்சரின் கட்டளைப்படி, பொதுத்தேவைக்கு அவசியமாகத் தேவைப்படுகின்றதென விளம்பரம் செய்யப்பட்டுள்ளன. இவ்வேற்பாடு கட்டுப்படுத்தப் பட்டுள்ள காணிகளுட் சில குத்தகைக்கு எடுத்துப் பயிர்செய்த காணிகளாகும். இதில் பயிர் அறுவடை செய்யாமல் இவ்வருட ஆரம்பத்தில் வெளியேறிய குத்தகைக்காரர் கட்கு பயிரழிவு நட்டம் கொடுப்பதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று, அவர்கள் விசாரிக்கப்பட்டனர்.

இவ்விசாரணையின் விபரங்கள் பின்வரும் அட்டவணைகள் 2, 3ல் காட்டப்பட்டுள்ளன இதில் காட்டப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் பிழையானது, பொய்யானது அன்றி முரணானது எனவும் பயிரழிவு நிவாரணம் இக்குத்தகைக்காரருக்குக் கொடுக்கக் கூடாதென ஆட்சேபம் தெரிவிக்க விரும்பும் எவரும் தங்களது ஆட்சேபனைகளை விபரமாகக் காரணங்காட்டி, எழுத்துமூலம் எதிர் வரும் 26-12-86ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் 12 மணிவரை நேரடியாக தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் என்னிடம் கையளிக்கலாம் என இத னால் அறிவிக்கின்றேன். மேற்குறிப்பிட்டவாறுள ஆட்சேபனைகளை 26.12-86ன் முன்னும், யாழ் செயலகத்தில் அலுவலக நேரத்தில் என்னிடம் நேரடியாகவும் கையளிக்கலாம்.

ச. பொ. பாலசிங்கம்
உதவி அரசாங்க அதிபர் (காணி) யாழ் மாவட்ட செயலாளர் அரசாங்க அதிபருக்காக

அட்டவணை 3 (நேற்றைய தொடர்ச்சி) உதவி அரச அதிபர் பிரிவு — தெல்லிப்பளை, கிராமசேவகர் பிரிவு — பலாலி

| விண்- இல. | விவசாயம் செய்தவரின் பெயரும் விலாசமும் | காணி உரிமையாளரின் பெயரும் விலாசமும் | காணியின் பெயர் | 1986 ஜன.—பெப். செய்கையில் இருந்த பரப்பளவு |
|---|---|---|---|---|
| 03. | யோன் சந்திரன் அல்லது மாதன் சந்திரன், பிள்ளையார் கோவிலடி, தையிட்டி, காங்கேசன்துறை. | வயிரப்பிள்ளை இளையபிள்ளை, ''பொன்மணி இல்லம்'' தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை. | ''குமக்கம்பரவை'' | 16 |
| 04. | கிருஷ்ணர் தவத்துரை மே/பா சின்னட்டி சினியர், எருப்பிட்டி, பன்னாலை, தெல்லிப்பளை. | எல்லுப்போல மார்க்கண்டு, இராசரத்தினம், மே/பா அ. செல்லையா, அந்தணர்திடல், சப்பூது கரவெட்டி. | ''அம்பணகாடு'' | 5 |
| 05. | மாதன் சூரியன், மே/பா ந. கதிரவேலு, கலைவாணி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை. | வயிரவப்பிள்ளை கதிராசிப்பிள்ளை, 'பொன்மணி இல்லம்' தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை | ''விழிசிட்டி'' | 18 |
| 07. | கறுவல் செல்லன், வள்ளுவர்புரம், தையிட்டி, காங்கேசன்துறை. | மரியான் பூதன், குளத்தடிப்பிள்ளையார் கோவிலடி, தையிட்டி, காங்கேசன்துறை, | ''பன்வழலை'' | 4 |
| 08. | சின்னத்துரை தர்மலிங்கம், கேசரிவீதி, தையிட்டி, காங்கேசன்துறை. | 1. அருணாசலம் நவமணிதேவி, பழைய டிஸ்பென்சரி வளவு, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.<br>2. சிதம்பரி செல்லையா (குத்தகையாளர்) மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி. | ''வதிராளி'' | 17 |
| 09. | சிதம்பரப்பிள்ளை செல்லையா, கேசரிவீதி, தையிட்டி, காங்கேசன்துறை. | 1. சிதம்பரப்பிள்ளை இளையதம்பி, மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி.<br>2. சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை, மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி | ''கற்கினானை - விளானை'' | 08 |
| 10. | கனகர் நன்னித்தம்பி, ஐயனார் வீதி, சுன்னாகம் | 1. செல்லையா லோகானந்தன், கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன் துறை.<br>2. செல்லையா பத்மானந்தன், கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன் துறை.<br>3. சிதம்பரப்பிள்ளை செல்லையா (தந்தை) கேசரிவீதி, தையிட்டி, காங்கேசன்துறை. | மேற்படியே | 04 |
| 11. | பூதன் இரத்தினசிங்கம், வள்ளுவர்புரம், தையிட்டி, காங்கேசன் துறை. | 1 நடராசா தில்லைச்சிற்றம்பலம் (இந்தியாவில்)<br>2. சுப்பிரமணியம் சந்திரசேகரா (மேற்பார்வையாளர்) ''யோகவாசா'' கோப்பாய் சந்தி, கோப்பாய். | 'பன்வழலை' | 10 |
| 12. | மூத்தான் கந்தன், வள்ளுவர்புரம், தையிட்டி, காங்கேசன்துறை | 1. நடராசா தில்லைச்சிற்றம்பலம் (இந்தியாவில்)<br>2. சுப்பிரமணியம் சந்திரசேகரா (மேற்பார்வையாளர்) ''யோகவாசா'' கோப்பாய் சந்தி, கோப்பாய். | மேற்படியே | 03 |
| 13. | பொன்னன் சிவராசா, குளத்தடிப்பிள்ளையார் கோவிலடி, தையிட்டி, காங்கேசன்துறை. | மேற்படியே | மேற்படியே | 04 |
| 14. | சின்னட்டி இராசா, மே/பா. இராசரத்தினம், இலகடி ஒழுங்கை, கோப்பாய் வடக்கு, கோப்பாய், | பொன்னையா இராசமலர், மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை, | 'கனதியகல்' | 04 ¾ |
| 15. | செல்லத்துரை சிவகுமாரன், கரு ம்பனை மேற்கு, காங்கேசன் துறை. | 1 செல்லத்துரை தெய்வானைப்பிள்ளை புதுவீடு கருகம்பனை, காங்கேசன்துறை<br>2. தர்மதாசன் இருபாசக்தி புதுவீடு கருகம்பனை காங்கேசன்துறை, | 'கக்கிலசிட்டி' | 20 |
| 16. | கந்தையா அதிமதுரசிங்கம் மே/பா. மகாதேவன், கொக்குவில் மேற்கு, கொக்குவில் | மேற்படியே | மேற்படியே | 30 |
| 17. | சின்னத்தம்பி செல்லத்துரை, மே/பா. மணி, இராசவீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. | அருணாசலம் நவமணிதேவி, மே/பா. ஆறுமுகம், பழைய டிஸ்பென்சரி வளவு, கோப்பாய் தெற்கு கோப்பாய் | 'தம்பானை' | 13 |
| 18. | வேலாயுதம் சின்னமணி, உடையார் வளவு, கிராமசபை றோட், மயிலிட்டி வடக்கு. | முத்துக்குமாரு சிவசுப்பிரமணியம் குரும்பயர் குலம் மயிலிட்டி வடக்கு. | சிலுப்பிலானையும் சாத்தாகிரி அல்லது சாத்தாரி | 8 |
| 19. | சின்னட்டி பசுபதி, பாத்மா கோவிலடி, பண்டத்தரிப்பு | சின்னட்டி நடராசா கப்பூது கரவெட்டி | கடத்தனைக்கப்பன் | 4 |
| 20. | வயிரமுத்து சிவபாலரத்தினம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம் | நாகேஸ்வரி விவேகானந்தன் வன்னியசிங்கம் வீதி கொல்லங்கலட்டி. | பச்சைந்தை (குஞ்சுக்கலட்டி) | 8 |
| 21. | இராசா விநாயகமூர்த்தி, விளங்காவத்தை, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை | முத்ததம்பி கந்தசாமி மனைவி சுலோசினி 99 ஹம்டன் ஒழுங்கை வெள்ளவத்தை. | விளிசிட்டி | 12 |
| 22. | ஆறுப்பிள்ளை இராசா, விளங்காவத்தை, மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை. | மூத்ததம்பி கந்தசாமி மனைவி சுலோஜினியும் 99 ஹம்டன் ஒழுங்கை வெள்ளவத்தை. | விளிசிட்டி | 8 |
| 23. | கந்தையான் இளையகுட்டி தையிட்டி கிழக்கு அரசடி வீதி, காங்கேசன்துறை. | விசுவாசநாதன் வன்னியசிங்கம் பன்னாலை தெற்கு தெல்லிப்பளை. | அம்பணகாடு | 10 |
| 24. | சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளை கொல்லங்கலட்டி தெல்லிப்பளை. | இளையதம்பி திருநாவுக்கரசு ''பொன் இல்லம்'' தெல்லிப்பளை. | குடும்பையப் புலமும் எக்கிற வலையும் | 4 |
| 25. | வயிரமுத்து குணரத்தினம் விழானை மாவிட்டபுரம் தெல்லிப்பளை. | அப்பாக்குட்டி கதிர்காமநாதனும் மனைவி மகேஸ்வரியும் தெல்லிப்பளை கிழக்கு தெல்லிப்பளை. | பச்சந்தை | 20 |
| 26. | சின்னையா சிவரத்தினம், கிராமக்கோட்டடி, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை, | சின்னையா சதானந்தன் விதானையார் ஒழுங்கை ஐயனார்கோயிலடி மல்லாகம். | செட்டியன் குறுக்கட்டு | 16 |
| 28. | இளையதம்பி செல்லத்தம்பி, மே/பா. சின்னட்டி சினியர், எருப்பிட்டி, பன்னாலை, தெல்லிப்பளை. | எல்லுப்போலை மார்க்கண்டு இராசாத்தினம் டோகா (அரேபியா) எல்லைப்போலை மார்க்கண்டு (சாட்சியமளித்தவர்) மே/பா. அ.செல்லையா அந்தணர்திடல் கப்புளை கரவெட்டி. | அம்பணக்காடு | 5 |
| 29. | இரத்தினம் குமாரகுலசூரியர், கிராமக்கோட்டடி, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை. | சம்பந்தபிள்ளை சிதம்பர நடராசா டச்சுலேன் முளாய் சுளிபுரம் மகள் சிவனேஸ்வரி. | செட்டியன்குறுக்கட்டு | 9 |
| 30. | வல்விபுரம் வயிரமுத்து வீமன்காமம் டக்கு தெல்லிப்பளை. | சினியர் இராசா மாவிட்டபுரம் தெல்லிப்பளை- | இக்கிராலை | 8 |
| 31. | வேலாயுதம் கணபதிப்பிள்ளை மே/பா. யிக்வாகனம் கோப்பாய் தெற்கு கோப்பாய். | சரவணமுத்து அருணாசலமும் பெண் நவமணிதேவியும் வேலாயுதம் கணபதிப்பிள்ளை பழைய டிஸ்பென்சறி வளவு கோப்பாய் தெற்கு கோப்பாய். | இப்பிலன் | 25 |
| 33. | விசுவநாதர் வன்னியசிங்கம் பன்னாலை தெல்லிப்பளை. | திருமதி. சுசிலாதேவி நெல்லைலிங்கம் கே/பா வி. சண்முகலிங்கம் பாடசாலை ஒழுங்கை இருபாலை கோப்பாய். | நக்கட்டி ஓடை | 4 |
| 34. | சினியர் சிவகுரு வீமன்காமம் தெல்லிப்பளை. | பொன்னம்பலம் அரியரத்தினம் சச்சிதானந்தன் மயிலிட்டி தெற்கு மயிலிட்டி. | விளிசிட்டி | 6 |
| 35. | சுந்தையா சின்னத்துரை மே/பா. ச. கணபதிப்பிள்ளை சரசாலை மத்தி, சரசாலை. | அருளானந்தம் செல்லம் 'கமலபவனம்' கரவெட்டி. | ஒலக்கன்கலட்டியும் நாகன்காடும் | 4½ |
| 36. | மூத்தவி ஆறுமுகம் யார்வை மயிலிட்டி வடக்கு மயிலிட்டி | ஆறுமுகம் பவளகாந்தன் மயிலன் வடக்கு மயிலிட்டி. | உதிரிப்புலம் | 8 |
| 37. | சந்தையா திருஞானம் கொல்லன்கலட்டி தெல்லிப்பளை | சந்தப்பிள்ளை சீதை (கிளை 25) மானிப்பாய் | கிளாலை | 4 |
| 38. | பூதன் தங்கவேல் குளத்தடிப்பிள்ளையார் கோவிலடி தையிட்டி காங்கேசன்துறை | பொன்னன் சிவராசா குளத்தடிப் பிள்ளையார் கோவிலடி தையிட்டி காங்கேசன்துறை | பள்வழலை | 4 |
| 39. | மயிலு கிட்ணபிள்ளை மே/பா சந்திரலிங்கம் டச்றோட் உடுவில் சுன்னாகம் | நிர்மலாதேவி திருநாவுக்கரசு காங்கேசன்துறை வீதி தெல்லிப்பளை (குத்தகைக்குக் கொடுத்தவர் சரவணமுத்து அருணாசலம்) | குரும்பயப்புலம் | 12 |
| 40. | மரியான் பூதன் குளத்தடிப் பிள்ளையார் கோவிலடி தையிட்டி காங்கேசன்துறை | நடராசா தில்லைச்சிற்றம்பலம் (இந்தியாவில்) சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளை சந்திரசேகரா (மேற்பார்வையாளர்) | பன்வாலை | 4 |
| 41. | மாப்பாணர் வன்னித்தம்பி இல: 83 அம்பாள் வீதி நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம் | சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளை மே/பா ஜீவேஸ்வரா கொல்லங்கலட்டி தெல்லிப்பளை | களத்தை | 5 |
| 43. | இளையதம்பி புவனேந்திரன் கிளானை மாவிட்டபுரம் தெல்லிப்பளை | அப்பாக்குட்டி கதிர்காமநாதனும் பெண் மகேஸ்வரியும் (ஒற்றி வயிரமுத்து குணரத்தினம் | பச்சந்தை | 6 |
| 45. | வேலுப்பிள்ளை தம்பிராசா கொத்துக்கட்டி றோட் நவாலி தெற்கு மானிப்பாய் | செல்லத்துரை தெய்வானைப்பிள்ளைக்கும் புதுவீடு கருகம்பனை காங்கேசன்துறை தர்மதாசன் மனைவி கிருபாசக்திக்கும் | கக்கிலிப்பிட்டி | 20 |
| 46. | வயிரமுத்து கனகரத்தினம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு சுன்னாகம் | கதிர்காமநாதன் பெண் பரமேஸ்வரி (ஒற்றி வயிரமுத்து குணரத்தினம் | பச்சந்தை | 6 |
| 47. | கந்தப்பிள்ளை இராசா சடப்பச்சை வயிரவர் கோவிலடி கொல்லன்கலட்டி தெல்லிப்பளை | 1. மூத்தவி சதாசிவம் யார்மை மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை<br>2. சிதம்பர உடையார் குமாரசிங்கம் மே/பா சிதம்பர உடையார் பன்னாலை தெல்லிப்பளை | கிளுவையிட்டி<br>உதிரும்புலம் | 9½<br>10¾ |
| 48. | திருமதி தவராசா அருந்தவம், மயிலிட்டி வடக்கு, அரசடி வீதி, காங்கேசன்துறை. | கந்தையா இளையகுட்டி மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை. | குமாரியோடை | 4 |
| 49. | கதிர்காம சின்னக்கண்டு, முட்டிவிளானை, மயிலிட்டிவிளானை, காங்கேசன்துறை. | சின்னத்துரை இரவீந்திரன் முட்டிவிளானை, மயிலிட்டி வடக்கு. | சலப்பத்தை | 4 |
| 51. | பொன்னு சங்கரப்பிள்ளை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம். | செல்லத்துரை தெய்வானைப்பிள்ளை புதுவீடு கருகம்பனை, காங்கேசன்துறை. | சிலும்பிலானும் சாக்தகிரியும் | 7 |
| | மேற்படியே | அருணாசலம் நவமணிதேவி கோப்பாய் தெற்கு கோப்பாய். | விளானை சாதகிரி | 4 |
| 52. | இளையதம்பி வயித்திலிங்கம் மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை. | பொன்னு சங்கரப்பிள்ளை புன்னாலைக்கட்டுவன் தெற்கு சுன்னாகம். | செண்பகத்தோட்டம் | 4 |
| 53. | செல்லத்துரை சிவராசா மே/பா சி. வீரசிங்கம் அணிஞ்சிலடி அளவெட்டி வடக்கு அளவெட்டி. | இளையதம்பி செல்லத்துரை மே/பா சி. வீரசிங்கம் அணிஞ்சிலடி அளவெட்டி வடக்கு அளவெட்டி | வல்விரானை | 8 |
| 54. | சங்கரப்பிள்ளை தம்பையா மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை. | சங்கரப்பிள்ளை விஸ்வநாதமுதலியார் சுப்பிரமணியம் சண்முகலிங்கம் கொல்லன்கலட்டி தெல்லிப்பளை (குத்தகைக்கு கொடுத்தவர்) | விழிசிட்டி | 10 |

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

காரியத்தில் இறங்குங்கள் உங்கள் தோள் களைக் கொடுத்து தேச முன்னேற்றம் என்ற தேரின் சக்கரத்தைக் கிளப்புங்கள்,
—சுவாமி விவேகானந்தர்—

உதயன்

இல,15 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 23-12-1986 த. பெ இல 23

# துணிந்துவிட்டார்கள் கிழக்கின் முஸ்லிம்கள்

கோட்டேயில், நாடாளுமன்றத்தில் இப்போது வரவு— செலவுத் திட்டம் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் கிழக்கிலங்கை முஸ்லிம் எம். பிக்களின் உரைகள்— கருத்துக்கள் வழமைக்கு மாறாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த அவர்கள் அரசாங்கத்தின் போக்கில் அதிருப்தி அடைந்தவர்களாக, சலிப்படைந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை அவர்களது கருத்துக்கள் உறுதி செய்கின்றன.

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும், கல்முனை எம். பியுமான ஜனாப் ஏ ஆர் மன்சூர், பிரதி அமைச்சரும் சம்மாந்துறை எம். பியுமான ஜனாப் எம். ஏ. மஜீத் ஆகியோரது பேச்சுக்கள் மிகவும் காரசாரமாக இருந்தன. ஆனால் அவை அர்த்த புஷ்டியானவை. உண்மை நிலையைப் படம் பிடித்துக் காட்டுபவை.

கிழக்கு முஸ்லிம் எம். பிக்கள் எல்லோருமே ஆளுங்கட்சியான ஐ. தே க வைச் சேர்ந்தவர்கள். அவர்களைப் பெயருக்கு வைத்துக் கொண்டு கிழக்கு முஸ்லிம் மக்களின் ஏகப் பிரதிநிதிதானே என்றவாறு அரசு தன்னிச்சைப்படி நடந்து கொண்டது.

முஸ்லிம்களின் பல உரிமைகளை மறுத்த போது, அவர்களுக்குப் பல அநீதிகளை இழைத்த போது அவர்களின் எம். பிக்கள் தமது மனத்துக்குப் பட்டதைத் தானும் கூறுவதற்கு அஞ்சினார்கள். ஆனால் இப்போது அவர்கள் துணிந்து விட்டார்கள்.

அதன் அர்த்தம் என்ன? முஸ்லிம்களுக்கு எதிரான அநீதிகள் அளவு கடந்து போயிருக்க வேண்டும். அது மட்டுமன்றி அவர்கள் மீது அரசு குதிரை விட்டதை, விடுவதை அவர்கள் புரிந்திருக்க வேண்டும்.

கல்வியில், வேலைவாய்ப்பில், காணி விவகாரத்தில் முஸ்லிம்களும் இப்போது புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை கிழக்கு முஸ்லிம் எம். பிக்களின் பேச்சுக்கள் நன்கு புலப்படுத்துகின்றன.

தமிழர்களுக்கு எதிரான அநீதிகளும், அடக்கு முறைகளும் மேற்கண்ட புறக்கணிப்புகளில் இருந்து தான் முகிழ்த்தன. அதனால் தான் தமிழ் மக்களுக்கு நேர்ந்த கதி தமக்கும் ஏற்படலாம் என கிழக்கு முஸ்லிம்கள் ஊகித்திருக்க வேண்டும்; உணர்ந்திருக்க வேண்டும். எத்தனை காலம் தான் ஏமாற்றலாம்?

இனப்பிரச்சினை விவகாரத்திலும் அந்த ஏமாற்றம் பிரதிபலிக்கிறது. கிழக்கிலங்கை முஸ்லிம்களின் குரலை நெருக்கிப் பிடித்துக் கொண்டு அரசு தானே அவர்களுக்காகப் பேசி வந்தது. தான் எடுக்கும் எந்த முடிவையும் அவர்களை ஏற்கச் செய்யும் நிலையில், கட்டாயப்படுத்திச் சுமத்து நலைக்கச் செய்யும் நிலையில் வைத்திருந்தது. ஆனால் இனியும் அந்த ஜம்பம் பலிக்குமா என்று எவரையும் சந்தேகம் கொள்ளச் செய்யும் புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் தமது சார்பில் தாமே பேசும் துணிவு அவர்களுக்கு வந்திருக்கிறது. சென்னைக்குச் சென்று தமிழர் அமைப்புக்களுடன் பேச்சு நடத்த முடிவு செய்திருக்கிறார்கள்.

அது மட்டுமா?

கிழக்கில் தமிழருடன் இணைந்தே முஸ்லிம்கள் வாழ விரும்புவதாகவும்

சிங்களப் பகுதிகளைத் தவிர்த்து விட்டு ஏனைய பகுதிகள் தமிழ் பேசும் மாகாண சபையாக அமைய வேண்டும் என்றும்—

தமிழ் மொழி மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படும் என தமிழர் அமைப்புகள் பகிரங்கமாக உத்தரவாதம் தர வேண்டும் என்றும்—

கிழக்கு முஸ்லிம் எம். பிக்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு இப்போது முழுக்க முழுக்க கிழக்கையே சுற்றிச் சுழல்கிறது. ஆகையால் முஸ்லிம்கள் மத்தியில் இப்படி ஒரு திருப்பமும், மாற்றமும் உருவாகி இருப்பது ஒரு நல்ல சகுனமாகும் நல்ல தருணமும் ஆகும்.

இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாது, கிழக்கு முஸ்லிம்களை தமது பக்கம் அணைத்துக் கொள்வது தமிழர்களின் மிக அவசரத் தேவையாகும். அவர்களுக்கு இருக்கக் கூடிய சந்தேகங்களை நீக்கி நிலைமையைத் தெளிவுபடுத்தி, தொடர்ந்தும் அவர்கள் தமிழ் மக்களின் சகோதரர்கள் போல வாழ வழிசெய்வது தமிழர்களது மிகப்பெரும் கடமையுமாகும்.

கிழக்கு முஸ்லிம்களைத் தமிழர்கள் சகோதர உணர்வுடன் சமத்துவம் கொடுத்துச் சேர்த்துக் கொண்டால் ஸ்ரீலங்கா அரசு அவர்களுக்காக வக்காலத்து வாங்குவதற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடலாம்.

தமிழர்கள் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும். நிச்சயமாக, தவறாமல், சாட்டுச் சொல்லாமல், தமது நல்லெண்ணத்தைக் காட்டிச் சுமுக உறவுக்கும், தீர்வுக்கும் வழி கோல வேண்டும்.

லாகூரில் 2 தினங்களாக நடந்த

# பாக்-இந்திய பேச்சு திருப்திகரமாக முடிவு

புதுடில்லி, டிச. 22

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் இரண்டு தினங்களாக லாகூரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக முடிவுற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தை முடிவில் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

சிரேஷ்ட அதிகாரிகள் மட்டத்தில் இந்தப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

சீக்கிய தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் அளிக்கமாட்டாது என்று பேச்சுவார்த்தையில் பாகிஸ்தான் சார்பாக கலந்துகொண்ட உள்துறைச் செயலாளர் மஹ்லூட் இந்தியக் குழுவிடம் உறுதிஅளித்தார்.

இந்தியாவுக்கு எதிராக பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆதரவு அளிக்கமாட்டாது என்றும் அவர் உறுதி அளித்தார். (அ)

## வெளி உலகில்

### 1200 கிலோ போதைவஸ்து சிக்கியது

மாஸ்கோ, டிச 22

சோவியத் சுங்க அதிகாரிகள் 1200 கிலோ போதை வஸ்துவைக் கைப்பற்றி உள்ளனர்.

இதன் பெறுமதி 3 கோடி அமெரிக்க டாலர்கள் ஆகும்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் விற்பதற்காக பாகிஸ்தானில் இருந்து இது ஆப்கானிஸ்தானுக்கு கொண்டு வரப்பட்டதாக நம்பப்படுகிறது (இ)

### ஆஸி-ஜப்பான் ஒப்பந்தம்

சிட்னி, டிச 22

ஆஸ்திரேலியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் பரஸ்பர வர்த்தகத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு ஆஸ்திரேலிய ஜனநாயக கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

## உலக சனத்தொகை 620 கோடியாக அதிகரிக்கும்

நியூயோர்க், டிச. 22

அடுத்த 15 ஆண்டு காலத்தில் உலக சனத்தொகை 620 கோடியாக உயரும் என்று அமெரிக்க சனத்தொகை மதிப்பீட்டு புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கிறது.

தற்போது சீன, இந்தியா, சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளும் உலக சனத்தொகையில் அரை வாசியைக் கொண்டிருக்கின்றன.

கைத்தொழில் நாடுகளின் சனத்தொகை அதிகரிப்புடன் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சனத் தொகை அதிகரிப்பு 1க்கு 10 என்ற விதத்தால் அதிகரித்து வருகிறது.

# போர்நிறுத்தம் செய்வதற்கு புலிகளுடன் நேரடிப் பேச்சு

## சூழ்நிலை உருவாகி வருவதாக அரசியல் வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, டிச 23

அடுத்த கட்டமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தி போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வர இலங்கை அரசு தீவிர ஆலோசனை மேற்கொண்டு வருகிறது என்று கூறப்படுகிறது.

கைதிகள் பரிமாற்றம் குறித்து நடத்தப்பட்ட இரகசியப் பேச்சுக்கள் போன்று,

போர் நிறுத்த உடன்பாடு ஒன்றைக் காண தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சுக்களை அரசு நடத்த வேண்டும் என்று அமைச்சர்கள் ரொனி டிமெல், காமினி திஸநாயக்கா, காமினி ஜெயசூரியா ஆகியோர் அரசு உயர் மட்டத்தை தீவிரமாக வலியுறுத்தி வருகின்றனர் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

அரசு உயர்மட்டம் இது குறித்து தீர்க்கமான முடிவு எடுத்தவுடன், வடபகுதி தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர்களின் உணர்வுகளை அறிந்துகொள்ள அரசு முதலில் முயற்சிக்கும்.

கைதிகள் பரிமாற்றம் பற்றிய பேச்சுக்களை வெற்றிகரமாக்கி உதவிய தமிழ்ப் பிரமுகரை இதற்குப் பயன்படுத்துவது பற்றியும் அரசு உயர்மட்டம் ஆலோசித்து வருகின்றது.

இதில் பலன் சாதகமானதாக இருந்தால், அமைச்சர் ஒருவரைச் சென்னைக்கு அனுப்பி புலிகள் தலைவர் வே. பிரபாகரனுடன் பேச்சுக்கள் நடத்தப்படுமாம். (இ-எ)

### மட்டக்களப்பில் வெளிநாட்டு செய்தியாளர்

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் குழு ஒன்று மட்டக்களப்பு வந்தது.

பி. பி. சி, யு. என். ஐ செய்தியாளர்களே இந்த விஜயத்தை மேற்கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் நேற்று மட்டக்களப்பு பிரசைகள் குழுச் செயலாளர் சாம் தம்பி முத்துவையும் மற்றும் ஊர்ப்பிரமுகர்களையும் சந்தித்தனர். (இ-எ-21)

## இளைஞனுக்கு தண்டனை

வல்வெட்டி டிச 23

மாணவிகளுடன் சேட்டைவிட்டார் என்று கூறப்படும் வாலிபர் ஒருவர் புலிகளினால் தண்டிக்கப்பட்டார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:—

பொலிகண்டியைச் சேர்ந்த இந்த வாலிபர் மாணவிகளுடன் சேட்டைவிட்ட குற்றச்சாட்டின் பேரில் வதிரியில் உள்ள அவரின் தற்காலிக வசிப்பிடத்துக்கு முன்னால் உள்ள விளையாட்டு மைதானத்தில் பொதுமக்கள் முன்னிலையில் கைகள் சட்டப்பட்ட நிலையில் மேசையின் மேல் நிறுத்தப்பட்டாராம்.

அவரின் குற்றங்களை நிரூபித்த புலிகள் 1 மணித்தியாலம் வரை அங்கே அவரை நிறுத்தி வைத்துவிட்டு தமது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றார்கள். (இ-190)



**பொய்யாமொழி**

குறள்:
புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு

பொருள்:
(நோய்க்கு இடமாகிய) உடம்பில் ஒரு மூலையில் குடியிருந்த உயிர்க்கு, நிலையாகப் புகுந்திருக்கும் வீடு இதுவரையில் அமையவில்லையே?

## மேஜர் அல்பேர்ட்டுக்கு நினைவுச் சின்னங்கள்

பலாலி, டிச 23

அச்சுவேலி, அச்செழு, ஆவரங்கால், நீர்வேலிப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் போராளி மேஜர் அல்பேர்ட் (க. ரூபநிதி) நினைவுச் சின்னங்கள் திறந்துவைக்கப்பட்டன.

இராணுவத்துடனான நேரடி மோதலில் விமானத்தாக்குதலுக்குட்பட்டு வீரமரணமடைந்த அல்பேர்ட்டின் ஓராண்டுப்பூர்த்தியை ஒட்டியே இந்நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டன.

அச்சுவேலி மகாவித்தியாலயத்துக்குமுன் அச்சுவேலி – வயாவிளான் சந்தியில் படத்துடன் கூடிய குடையுரு வளைவும், ஆவரங்காலில் கலையரங்கொன்றும், அச்சுவேலிதெற்கில் டிஸ்பென்சறியும், அச்செழு, நீர்வேலிப் பகுதிகளில் சிலை வைப்பதற்கான பீடமும் அமைக்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி – பத்தமேனி ஞானவைரவர் ஆலயத்துக்குமுன்னுள்ள காணியில் அமைக்கப்படவுள்ள சிறுவர்பூங்காவிற்கும் அல்பேர்ட் சிறுவர் பூங்கா எனப் பெயரிடப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப வேலையும் அவரது முதலாவது ஆண்டு நினைவு தினத்தில் நடைபெற்றது. (இ119)

## யாழ் பாடசாலைகளுக்கு கட்டடம் அமைக்க 65 லட்சம் ரூபா

பலாலி, டிச. 23

1987 ஆம் ஆண்டின் பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து வடபகுதிகல்வித்திணைக்களத்திற்கு 65 லட்சத்து 10 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி தனியாக வகுப்பறைகளுக்கான கட்டடத்துக்கே பயன்படுத்தப்பட வேண்டுமென மாவட்ட அபிவிருத்திப்பகுதி (திட்டமிடல் பிரிவு), கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.

இத் தொகையில் யாழ்ப்பாணக் கல்வி வட்டாரத்திற்கு மிகக் கூடிய தொகையான 11 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், ஊர்காவற்துறைக் கல்வி வட்டாரத்துக்கு மிகக் குறைந்த தொகையான 3 லட்சத்து 55 ஆயிரம ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏனைய கல்வி வட்டாரங்களுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்ட தொகைகள் வருமாறு:—

கோப்பாய் 6லட்சத்து 85 ஆயிரம் ரூபா.

சாவகச்சேரி 5 லட்சத்து30 ஆயிரம் ரூபா.

பருத்தித்துறை 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபா

உடுப்பிட்டி 6 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா

நல்லூர் 7. லட்சத்து 75 ஆயிரம் ரூபா.

மானிப்பாய் 7 லட்சத்து 20 ஆயிரம் ரூபா.

காங்கேசன் துறை 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபா

வட்டுக் கோட்டை 5 லட்சத்து 15 ஆயிரம் ரூபா, (இ-119)

# தரம் குறைந்த இறைச்சி

## புகார்கள் கிடைத்திருப்பதாக சுகாதார பரிசோதகர் தகவல்

யாழ்ப்பாணம், டிச.22

பழைய, தரமற்ற தாயுள்ள மாட்டிறைச்சியை சில இறைச்சிக் கடை உரிமையாளர்கள் விற்பனை செய்கிறார்கள் என மாநகரசபைக்கு பலர் முறைப்பாடு செய்துள்ளனர்.

மாநகரசபை சுகாதார பரிசோதகர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இப்படியானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கச் செல்லும் உத்தியோகத்தர்கள் இவர்களால் தாக்கப்படுகிறார்கள்.

இறைச்சிக்கு வெட்டப்படும் மாடு 24 மணி நேரத்தின் முன் மாநகர சுகாதாரப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டு நோயற்றது என அவர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் இன்று எந்த ஒரு இறைச்சிக்கடை உரிமையாளரும் இவ்வாறு செய்வதில்லை.

பொது மக்கள் முத்திரை குத்தப்படாத இறைச்சியை வாங்காது விடுவதன் மூலம், இவர்களை மாநகரசபையுடன் தொடர்பு கொள்ளச் செய்யலாம் என்று அவர் தெரிவித்தார். (இ-5)

## தேவா தலைமையில் சந்திக்க கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் மறுத்தது ஏன்?

கொழும்பு, டிச 23

அமைச்சர் தேவநாயகம் தலைமையில் இந்திய இணை அமைச்சர் குழுவைச் சந்திக்க கிழக்கு முஸ்லிம் எம். பிக்கள் ஏன் மறுத்தனர்?

இதற்கான காரணங்கள் தற்போது வெளி வந்துள்ளன

அம்பாறைத் தொகுதி கிழக்கு மாகாணத்திலேயே இருக்க வேண்டும் என்று வாதிடும் அம்பாறை எம். பி தயாரத்தினவுடனும்.

சேருவில சிங்களப் பகுதிகளை திருமலைமாவட்டத்தில் இருந்து பிரிக்கக் கூடாது என்று கூறும் சேருவில எம் பி லீலாரத்தினவுடனும் சென்று இணை அமைச்சர்களைச் சந்திக்கத் தயாரில்லை என்று கிழக்கு முஸ்லிம் எம் பிக்கள் தீர்மானித்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து தான் அமைச்சர் தேவநாயகம் தலைமையில் சென்று இந்தியக் குழுவைச் சந்திக்க முஸ்லிம் [illegible] மறுப்புத் தெரிவித்தனர். (உ-எ-ஐ)

## வருடாந்த ஐக்கியபோசனம்

மானிப்பாய், டிச 23

சத்தியபுரம் திருச்சபை வாரிய சங்கத்தினரின் வருடாந்த ஐக்கிய போசனம் இம்மாதம் 29 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறும் (இ-90)

## வெடிகொளுத்திக் கொண்டாடினர்

கரவெட்டி, டிச 23

இராணுவத்தினர் இரண்டு விடுதலைப்புலிகளை விடுவித்ததற்காக நெல்லியடி, கரவெட்டி பகுதி [illegible] மக்கள் ஆரவாரம் செய்தனர். (இ-70)

## மீன்பிடிப்படகு மோட்டார்களை கடலில் வீசும் கடற்படையினர்

பலாலி, டிச. 23

மயிலிட்டி, பலாலிப் பகுதி கடல் பாதுகாப்பு வலயத்திற்குள் மீன்பிடிக்கும் வள்ளங்களின் வெளி இணைப்பு மோட்டார்கள் கடற்படையினரால் பறிக்கப்பட்டு கடலில் வீசப்படுகின்றனவாம்.

அண்மையில் மீனவர்களிடமிருந்து 'றிசிற்' வழங்கி பறிக்கப்பட்ட மோட்டார்களை மீனவர்களிடமே ஒப்படைக்குமாறு மயிலிட்டிக் கரைப் பிரசைகள்குழுத் தலைவர் திரு ச. இரத்தினசாமியும், செயலாளர் த. தங்க வலாயுதமும் யாழ் அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதியைக் கேட்டிருந்தனர்.

இதனை அடுத்தே கடற்படையினர் இவ்வாறு நடந்து கொள்வதாகக் கூறப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை இவ்வாறு 11 வெளியிணைப்பு மோட்டார்கள் பறிக்கப்பட்டு கடலில் வீசப்பட்டனவாம்.

இவ்விடயம் சம்பந்தமாகவும் மேற்படி பிரசைகள் குழு ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியுள்ளது. (இ-119)

## தெல்லிப்பளையில் அம்புலன்ஸ் சேவை

யாழ்ப்பாணம், டிச. 23

தெல்லிப்பழை சுகாதாரப் பகுதியின் சுகாதார அபிவிருத்திச் சபையினர் அப்பகுதிப் பொது ஸ்தாபனங்களின் உதவியுடன் ஒரு அம்புலன்ஸ் வாகனத்தை மக்களின் சேவைக்காக அமர்த்தியுள்ளனர்.

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை முன் இருந்து சேவையில் ஈடுபடும் இவ்வாகனத்தைப் பொது மக்கள் குறைந்த கட்டணத்தில் உபயோகிக்கலாம்.

உயிர்காக்கும் பணியில் ஈடுபடும்போது சேவை இலவசமாகக் கிடைக்கும் என்று சுகாதார அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு இ. இராமச்சந்திரன் தெரிவித்தார். (இ-5)

## வீர மரணம்

யாழ்ப்பாணம், டிச. 22

அம்பாறை மாவட்டத்தில் தாண்டியடி என்னும் இடத்தில் பொலீஸ் கொமாண்டோக்கள் நடத்திய சுற்றி வளைப்புத் தாக்குதலின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு போராளிகள் வீரமரணம் அடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது

இச் சம்பவம் கடந்த 18ஆம் திகதி இடம் பெற்றது.

தம்பிலுவிலைச் சேர்ந்த ரவிக்குமார், கல்முனையைச்சேர்ந்த கமலன் ஆகியோரே வீரமரணம் அடைந்தவர்கள் என்றும் அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தியும், புலிகள் இயக்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெமிங்ரன்
மூளாய்

O/L 87 - விஞ்ஞானம்

ஆசிரியர்: J. R சூரி

நேர அட்டவணை: புதன், சனி, ஞாயிறு
மாலை 4.30 மணி.



# உதயன்

23 : 12 1986 செவ்வாய்க்கிழமை



சயன்ஸ் சென்ரர்
புகையிரத நிலைய வீதி, தெல்லிப்பழை

O/L 87—விஞ்ஞானம்

ஆசிரியர்: J. R. சூரி

நேர அட்டவணை: திங்கள், புதன், வெள்ளி
மாலை 3 30 மணி
செவ்வாய், வியாழன், ஞாயிறு—
காலை 9.00 மணி


அட்டவணை 3 (2ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | | | |
|---|---|---|---|---|
| 55. சிதம்பரப்பிள்ளை வைத்திலிங்கம் கல்லுப்பிடுங்கி கொல்லன் கலட்டி தெல்லிப்பளை | சிதம்பரப்பிள்ளை தர்மலிங்கம் விளங்காவத்தை மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை, | உதிரப்புலம் | | 03 |
| | சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி கல்லுப்பிடுங்கி கொல்லன்கலட்டி தெல்லிப்பளை | மேற்படியே | | 03 |
| | சின்னத்தம்பி லோகேஸ்வரன் (வாக்குமூலம் கொடுத்தவர்) | | | |
| 56. எல்லுப்போலை மார்க்கண்டு மே/பா செல்லையா 'காரைத்திடல்' கப்புது கரவெட்டி. | முத்துக்குமாரு சிவசுப்பிரமணியம் பத்தாவத்தை இளவாலை | சாத்தாவாசி | | 08 |
| | வேலுப்பிள்ளை துரைவீரசிங்கம் மே/பா அந்தோனிப்பிள்ளை பத்திமா இரி, பண்டத்தரிப்பு. | கடுத்தலைக்கப்பன் | | 12½ |
| 57. ஆறுமுகம் பவளநாதன் யார்வத்தை கொல்லன்கலட்டி தெல்லிப்பளை. | சீனியர் சிவகுரு தையிட்டி அம்மன் கோயிலடி காங்கேசன்துறை | கடுத்தலைக்கப்பன் | | 05 |
| 58. சின்னத்தம்பி கைம்பெண் சிதம்பரம் மே/பா மு. கார்த்திகேசு பெரியமதவடி சுன்னாகம் தெற்கு சுன்னாகம். | அருணாசலம் பெண் நவமணிதேவி கோப்பாய் தெற்கு கோப்பாய் | கந்தரை | | 08 |
| 58/1 மேற்படியே | தர்மபுத்திரன் கைம்பெண் கங்காதேவி | வியப்பை | | 05 |
| 58/2 மேற்படியே | வேலுப்பிள்ளை நடராசா மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை | இயப்பை | | 05 |
| 59. இளையதம்பி ஆறுமுகம் தையிட்டி கிழக்கு காங்கேசன்துறை. | அம்பலவாணர் சிவபாதசுந்தரம் கொல்லன்கலட்டி தெல்லிப்பளை | தம்பாலை | | 12 |
| இளையதம்பி ஆறுமுகம் தையிட்டி கிழக்கு காங்கேசன்துறை. | அருணாசலம் பெண் நவமணிதேவி மயிலிட்டி வடக்கு. | தம்பாலை | | 05 |
| 60. கணபதிப்பிள்ளை மகேந்திரலிங்கம் மே/பா. மயில்வாகனம் கோப்பாய் தெற்கு கோப்பாய். | கேதார கௌரி சிவபாலன் (அவுஸ்ரேலியா) | நக்கடிஓடை | | 10 |
| | சரவணமுத்து அருணாசலம் (குத்தகைக்குக் கொடுத்தவர்) | | | |
| மேற்படியே | மயிலு இட்டினபிள்ளை டச்சு ரோட் உடுவில் சுன்னாகம். | மேற்படியே | | 06 |
| 61. வன்னித்தம்பி புஸ்பதேவன், 54, அம்பாள் வீதி, நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம். | விஸ்வநாதர் வன்னியசிங்கம் பன்னாலை தெல்லிப்பளை. | தானத்தஞ்சிமா | | 08 |
| 62. மாலாணி செல்லத்துரை, முலவை, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை. | சுப்பிரமணியம் பொன்னுத்துரை கருகம்பனை காங்கேசன்துறை. | கந்தரை | | 27 |
| 63. கணபதிப்பிள்ளை வேலாயுதம், மே/பா. மு. நடராசா, சங்குவேலி வடக்கு, மானிப்பாய். | சரவணமுத்து அருணாசலம் பெண் நவமணிதேவி பழைய டிஸ்பென்சரி வளவு கோப்பாய் தெற்கு கோப்பாய். | கந்தரை | | 04 |
| 64. திருமதி. துரைசிங்கம் பவளரத்தினம், நீர்வேலி தெற்கு, நீர்வேலி. | அருணாசலம் பெண் நவமணி, பழைய டிஸ்பென்சறி வளவு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் | தம்பாலை | | 7 |
| 66. திருமதி. சுப்பிரமணியம் ஜெயலட்சுமி, கரம்பன் பிள்ளையார் கோவில்வீதி. வரணி. | சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளை, மடத்தடி, கொல்லன்கலட்டி, தெல்லிப்பளை. | கனத்தை | | 8 |
| 67. கந்தப்பிள்ளை கருணானந்தன், சலப்பத்தை, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை | இளையதம்பி செல்லத்துரை, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை | சலப்பத்தை | | 4 |
| 68. திருமதி. கந்தையா பரமேஸ்வரி, சி. தங்கம்மா மே/பா, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். | வன்னித்தம்பி புஸ்பதேவன், 54, அம்பாள்வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். | நாலாம்பனை | | 5¼ |
| 69. துரைச்சாமி யோகேஸ்வரன், தி. இளமுருகன் மே/பா. பெரியவிளான், இளவாலை. | பண்டாரம் துரைச்சாமி, பெரியவிளான், இளவாலை. | சட்டளேலை | | 6 |
| 70. கதிரிப்பிள்ளை நடராசா, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை | கதிரிப்பிள்ளை சுப்பிரமணியம், மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை. | பேய்ப்புளியடி | | 24 |
| 72. பாலன் மாணிக்கம், வள்ளுவர்புரம், தையிட்டி. | நிற்சிங்கம் இராசரத்தினம், நாயன்மார்கட்டு யாழ்ப்பாணம். | தெய்வீரன் | | 4 |
| 73. வயிரவி காளையர். சங்குவேலி வடக்கு. மானிப்பாய் | இராசரத்தினம் சின்னத்தங்கம், மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை | விழிசிட்டி | | 6 |
| 74. வல்லிசிவலிங்கம், வள்ளுவர் புரம், தையிட்டி | திரு. நடராசா தில்லைச்சிற்றம்பலம், பன்வழலை, இல. 41, பொலிஸ் கொமிஷனர் செயலகவீதி, எக்மோர் சென்னை, (சுப்பிரமணியம் சந்திரசேகரா காணி மேற்பார்வையாளர்) | பன்வழலை | | 6 |
| 75. சிவஞானம் பாக்கியநாதன் சங்குவேலி வடக்கு மானிப்பாய் | நடுவிலார் பொன்னையா யார்மை மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை | விளாலை | | 8 |
| 76. இராசா சிவபாலன் மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை | சங்கரப்பிள்ளை விசுவநாதமுதலியார் மேற்பார்வை சுப்பிரமணியம் சண்முகலிங்கம் கொல்லங்கலட்டி தெல்லிப்பளை | விழிசிட்டி | | 10 |
| 77. இராசா சிவபாலன் மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை | நடராசா தில்லைச்சிற்றம்பலத்துக்கும் மனைவி ருக்குமணிதேவிக்கும் (ஒற்றி கதிரிப்பிள்ளை இராசரத்தினம் மயிலிட்டி வடக்கு) | செட்டியன்குறிக் கட்டுவும் சம்பனையும் | | 12 |
| 78. சின்னத்தம்பி சிவசம்பு "தேவி வாசா" மயிலிட்டி தெற்கு காங்கேசன்துறை | செல்வரத்தினம் திருஞானசம்பந்தர் (திருமதி தி. லலிதாவதி) வல்லை வீதி, சங்கானை விசுவநாதர் வன்னியசிங்கம், பன்னாலை தெல்லிப்பளை | தானத்தஞ்சிமா<br>தானஞ்சிபா" | 8<br>2 | 4 |
| | சிவபாலன் கேதாரகௌரி (அவுஸ்திரேலியா) | நக்கட்டிஓடை / விழிசிட்டி | | 8 |
| 79. சிதம்பரப்பிள்ளை விரசிங்கம் இராச வீதி, நீர்வேலி தெற்கு | சரவணமுத்து அருணாசலம் –குத்தகைக்காரர் கோப்பாய் தெற்கு கோப்பாய் | விழிசிட்டி | | |
| | திருமதி இராசரத்தினம் சின்னத்தங்கம் | | | |
| 80. இராசரத்தினம் சின்னத்தங்கம் மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை | பொன்னம்பலம் அரியரத்தினம் சச்சிதானந்தம் உரிமையாளர் | | | |
| | 1. பொன்னம்பலம் அரியரத்தினம் சச்சிதானந்தம் சுப்பிரமணியம் சண்முகலிங்கம் (குத்தகைக்காரர்) ஆதிமயிலிட்டி காங்கேசன்துறை | விழிசிட்டி | 31 | 43 |
| | 2. வயிரவப்பிள்ளை கதிராசிப்பிள்ளை இ திருநாவுக்கரசு பொன்மணி இல்லம், தெல்லிப்பளை (மேற்பார்வையாளர்) | மேற்படியே | 12 | |
| 81. நடராசா குணரத்தினம் மே/பா திருமதி எஸ். மார்க்கண்டு சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் | 1. சீனியர் நடராசா<br>2. கந்தையா கந்தசாமி மே/பா ஐ. ஐயக்கோன், கந்தசாமி ஆசிரியர் ஒழுங்கை, கந்தரோடை சுன்னாகம் | கடத்தலைக்கப்பன்<br>இக்கிரானை | 5<br>2 | 7 |
| 83. ஐயம்பிள்ளை செல்லையா ஊரெழு வடக்கு சுன்னாகம் | வயிரமுத்து குணரத்தினம் மாவிட்டபுரம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு (மேற்பார்வையாளர் ஐயம்பிள்ளை வயிரமுத்து) | பச்சந்தை | | 6 |
| 85. நிற்சிவகர் வேலுப்பிள்ளை கொத்தாவத்தை மயிலிட்டி காங்கேசன்துறை | நாதர் சிங்கம்பிள்ளை கனகலட்சுமி தையிட்டி, காங்கேசன்துறை. | கனத்தை | | 2 |
| 86. மாலாணி முத்துத்தம்பி மே/பா நா. செல்லையா நாதோலை, இளவாலை. | நிற்சிங்கம் இராசரத்தினம் நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். | கந்தரை | | 3 |
| 87. வேலுப்பிள்ளை துரைநாயகம் மயிலிட்டி வடக்கு | ச. அருணாசலம் நவமணிதேவி கோப்பாய் தெற்கு கோப்பாய் | தம்பாலை | | 4 |

(முற்றும்)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு. சி. வீரசிங்கம்
(இளைப்பாறிய மலேசிய ப.வே.ப. ஓவசியர்)

மலர்வு: 30.9 - 1914 உதிர்வு: 12 - 01 - 1985

திதி: 22 - 12 - 1986

அப்பா! மரணம் தவிர்க்கமுடியாதது என்பதை மனது புரிந்துகொள்கின்றது. இருந்தாலும் நீங்கள் இல்லாத வெற்றிடத்தை நிரப்ப இயலாமல் எங்கள் இதயங்கள் ஏங்குகின்றனவே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,
செல்வராசாவும் மனைவியும்.

கல்வாணி வீதி.
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள், பன்றிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும்.

உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களுக்கு தரமான பால் நேரடி விநியோகம் செய்யப்படும்.

தொடர்பு கொள்க
RED ROSES FARM
தெணியம்பை தெரு,
வல்வெட்டித்துறை.

நத்தார் - புது வருட

## மலிவு விற்பனை

பலவித அளவுகளில் தரமான

### அன்ரெனா

* Band III ரூபவாஹினி அன்ரெனா ரூபா 110/- இருந்து
* Band I, III மட்ருஸ், ரூபவாஹினி அன்ரெனா ரூபா 300/- இருந்து
* டைபோல் (யூ) 2' 4' 6' 8'

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்,

* ரி.வி., வீடியோ டெக், ட்ரான்ஸ்போமர், மோட்டார் றீவைண்டிங் வேலைசெய்ய நாடுங்கள்

## யோண்சன்


### ரி- வி. சென்ரர்ஸ்

இல. 3. விக்ரோறியா வீதி,
(ஆஸ்பத்திரி பின் வீதி)
யாழ்ப்பாணம்.

(சுன்னாகம் பொது நூல் நிலையம் அருகாமையில்)
சுன்னாகம்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## ஆத்ம சாந்தி அழைப்பு



அமரர்
செல்வன் சு. தில்லைநடராசா
(கிளி

தோற்றம் 22 - 06 - 51 மறைவு 24 - 11 - 86

அன்புடையீர்!

சென்ற 24 - 11 - 86ல் இறைபதம் எய்திய எமது அன்புப் புதல்வனின் ஆத்ம சாந்தி சபிண்டீகரண நிகழ்ச்சிகள் எதிர்வரும் 24 - 12 - 86 புதன்கிழமை பகல் 11.00 மணிக்கு எமதில்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் சுற்றஞ்சூழ வருகை தந்து செல்வனின் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
S. T. சுப்பிரமணியம்
தம்பதிகள்

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்

## வாடிக்கையாளர்கட்கு!

சகலவித கேக் வகைகளுக்குத் தேவையான சாமான்களும் அலங்காரப் பொருட்களும்

மற்றும் நானாவித பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## சண்முகம் றேட்ஸ்

இல: 65,(185), பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## Horizon Enterprises

★ சவூதி ★ ஈராக்
★ குவைத் ★ ஓமான்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்கு செய்து தருவதுடன் பாஸ்போட், பொண்ட் ஆகியனவும் செய்து தரப்படும்.

அத்துடன் எம்மிடம் பாஸ்போட் விண்ணப்பப் படிவமும், சகல நாட்டிற்கான எல்லாவிதமான முத்திரைகளும் விற்பனைக்கு உண்டு.

யாழ் முகவரி:
A. பத்மதாஸ்,
மதுரா வீடியோ கிளப்,
இல. 96, 4ஆம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23549



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 – ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி 23 – 12 – 1986 தொலைபேசி இல. 24805, 22073

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Secnd Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka. Undeo nmber Q.J.60, N. 26. Telephone Number 24805, 22073.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org